செ.வெ.எண்: 74 நாள்: 29.08.2023

# பத்திரிகைச் செய்தி

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது !!!

தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சார்பாக செவிலியர் (Staff Nurse) பணிக்காலியிட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதில் சவுதி அரேபிய அமைச்சகத்தில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு குறைந்தபட்சம் இரண்டு வருடபணி அனுபவத்துடன் B.sc Nursing தேர்ச்சிபெற்ற 21 முதல் 35 வயதிற்குட்பட்ட பெண் செவிலியர்கள் தேவைப்படுவதாகவும் Data Flow மற்றும் HRD சான்றிதழ்களில் சான்றொப்பம் பெற்றவர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறும் கூறப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பணியாளர்களுக்கு Rs.80,000/- முதல் Rs.1,00,000/- வரை சம்பளம், உணவுப்படி, இருப்பிடம், விமானப்பயணச்சீட்டு ஆகியவை அந்நாட்டின் வேலையளிப்போரால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 05.09.2023 அன்று காலை 10.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் பதிவு முகாம் நடைபெறுகிறது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தினைச் சேர்ந்த தகுதியும் விருப்பமும் உடைய B.Sc Nursing படித்த மகளிர் அனைத்து கல்வி சான்றிதழ்களுடன் இம்முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் இந்த முகாமிற்கு வரமுடியாதவர்கள் தங்களுடைய சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தை ovemclmohsa2021@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இந்தப்பணிக்கு தேர்வுபெறும் பணியாளர்களிடமிருந்து சேவைக்கட்டணமாக ரூ 35,400/- மட்டும் வசூலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் மூலமாக அளிக்கப்படும் வெளிநாட்டு வேலைகளுக்கான பணிக்காலியிடங்கள் குறித்த விவரங்கள் இந்நிறுவன வலைத்தளமான www.omcmanpower.com-ல் கண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்கள் பற்றிய விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன தொலைபேசி எண்களின் (9566239685, 6379179200) (044-22505886/044-22502267) வாயிலாக அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.விஷ்ணு சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**இராமநாதபுரம்.**